Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC. No. 83 /2025
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS –4

| | | | |
|---|---|---|---|
| Name: | நாசி | Calling: | உதவி ஆய்வாளர் |
| Father's Name: | பொன்னுசாமி | Religion: | |
| Village: | காவலூர் | Age: | 53 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 26.03.2026 நேரம் : 12.10 PM

(எதிரி ஆஜர்.)

அ.சா.4 முதன்மை விசாரணை.

இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி.சிந்து மற்றும் உதவி ஆய்வாளர் திரு. நாகராஜன் என்பருக்காகவும் சேர்த்து ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கவும் அவர்கள் தாயரித்த ஆவணங்களை இந்த சாட்சியம்மூலம் குறியீடு செய்யவும் கற்றறிந்த எதிரிகளின் தரப்பு வழக்கிறஞர் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்தார்.

நான் தற்போது காவலூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிப்புரிந்து வருகிறேன். கடந்த 21.02.2023 ம் தேதி உதவி ஆய்வாளர் திரு. நாகராஜன் காவலூர் காவல் நிலையத்தில் நிலைய அலுவலில் இருந்தபோது வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் வந்த இன்டிமேசனை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த பிரசாந்த் விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார். **அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. புகார் வாக்குமூல

அதன்தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 4/2023 சட்டப்பிரிவுகள் 294(பி), 323,506(1) IPC கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** புகார் மனுவின் அசலை முதல் தகவல் அறிக்கையுடன் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பினார்.

பின்னர் அவரே வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவயிடம் சென்று 21.02.2023 14.00 மணிக்கு சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் சிலம்பரசன், சரத்குமார் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தார். **பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அதசாஆ 5 மற்றும் அதசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் அதே நாளில் அதே சாட்சிகள் முன்னிலையில் இவ்வழக்கில் எதிரி பயன்படுத்திய உடைந்த பீர் பாட்டில் ஒன்று, கருங்கல் ஒன்று கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார். **அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கருங்கல் மற்றும் உடைந்த பீர்பாட்டில் சா.பொ 1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. கைப்பற்றிய வழக்கு சொத்தை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிக்கொண்டார். **அந்த படிவம் 91 அ.த.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் சாட்சிகள் பிரசாந்த், வெங்கடேசன், புருசோத்தமன் மற்றும் மகசர் சாட்சிகள் ஆகியவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். எதிரியை தேடிவந்த நிலையில் 23.02.2023 ம் தேதி பகல் 11.00 மணிக்க ஆலமரம் பஸ்ஸ்டாப்பிடம் கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க இருநபர் நிலைய ஜாமினில் விடுவித்தார் . இவ்வழக்கில் காயம்பட்ட நபரான பிரசாந்த் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி.சிந்து என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என சான்றிதழ் பெற்றார். **பிரசாந்த் என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றுகள் முறையே அ.த.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 294(பி), 324,506(1) IPC என்பதில் இருந்து 294(பி), 324 IPC என பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தார். **அந்த பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யபப்படுகிறது**. அத்துடன் அவரது புலன் விசாரணையை முடித்து எதிரி

மீது குற்றம் உண்மையென தெரியவந்ததால் எதிரிகள் மீது 294(பி), 324 IPC இறுதி அறிக்கை தாக்கல் செய்தார். அவரது விசாரணையில் சாட்சிகள் அனைவரும் பிரிவு 161(3) குவிமுச ன் படி வாக்குமூலத்தில் உள்ளதை போல் தான் சொன்னார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் உதவி ஆய்வாளர் திரு.நாகராஜ் என்னுடன் இனைந்து பணியாற்றினாரா என்றால் இல்லை. உதவி ஆய்வாளர் திரு.நாகராஜ் என்பவரின் கையெழுத்து போடுவதை நான் பார்த்திருக்கிறேன், வழக்கு கோப்பில் உள்ள கையொப்பம் அவருடையது தான், அவரோடு சேர்ந்து பணியாற்றியதின் அடிப்படையில் தான் இந்த வழக்கில் சாட்சியம் அளித்தேன். அ.சா.1 மருத்துவமனையில் எந்த வாக்குமூலம் பெறவில்லை என்றும் வெள்ளை தாளில் தான் கையொப்பம் செய்தேன் என்றும் நான் கையொப்பம் செய்த வெள்ளை தாளில் என்ன எழுதிக்கொண்டார் என்று தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.2 வெங்கடேசன் சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும் சம்பவம் நடந்ததாக எனக்கு தெரியவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.3 சம்பவம் நடந்ததாக நான் கேள்விப்படவில்லை என்றும், போலிசார் கேட்டதன் அடிப்படையில் பெயர், முகவரி வாங்கிக்கொண்டு கையொப்பம் வாங்கிக்கொண்டார் என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. அனைத்து சாட்சிகளையும் சரியாக விசாரிக்காமல் காவல் நிலையத்திலே வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பார்வை மகசர், மாதிரி வரைப்படம், கைப்பற்றுதல் மகசர் போன்றவற்றை எந்த சாட்சிகள் முன்னிலையிலும் கைப்பற்றவில்லை என்று அ.சா.4 மற்றும் 5 சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் கண்ட சம்பவம் எதுவும் நடைப்பெறவில்லை என்றும் பொய்யான குற்றவழக்கு எதிரியின் மீது தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) நாசி

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K